1982 செப்டம்பர் 10]

5. அறிவிப்புகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் பல்வேறு விதித் துறைகள் சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்–பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவை தெரிவித்துள்ளார்.

6 அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) குஅடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே; இந்த பில் இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே நான் இதை அப்போஸ் செய்கிறேன். இதன் ஒரிஜினல் பில் 1943 லே இன்ட்ரொடியூஸ் செய்யப்பட்டபோது அன்றைக்கு இருந்த ஆங்கிலேய அரசாங்கம் அடகுக்காரர்களுக்கு சாதகம செய்யும் போது அந்தச் சட்டத்திலே மனிதாபிமான அடிப்படையிலே 'கான்சலேஷன்' என்ற ஒரு சரத்தை வைத்தார்கள். அதாவது அடகுக்கடைக்காரர்கள் தவறு செய்தால் அவர்களுடைய லைசென்ஸை கான்சல் செய்ய வேண்டுமென்ற ஒரு கடுமையான பனிஷ்மென்டை வைத்திருந்தார்கள். அதோடு இம்பிரிசன்மென்டு